வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேனி பழணி

தேதி 22.4.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் அரசு முறைப் பயணமாக, சவுதி அரேபியா சென்றுள்ளார்.
- அரசியல் சாசனத்தின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பதில் மக்கள் பிரதிநிதிகளுக்கே, அதிக பட்ச அதிகாரம் உண்டு என்று, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.
- இந்திய தர நிர்ணயக் கழகம், தர நிர்ணயத் துறையில் அதன் கூட்டாண்மைக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு, இன்டர்ன்ஷிப் வாய்ப்புக்களை அறிவித்துள்ளது.
- புதுச்சேரியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வெப்ப அலையை சமாளிக்கும் விதம் குறித்து சுகாதாரத் துறை, விழிப்புணர்வு கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது.

<u>மோடி-வெளிநாடு</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் அரசு முறைப் பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ளார். சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மான் அழைப்பின் பேரில் பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுள்ள இப்பயணம், அந்நாட்டிற்கான அவரது 3-ஆவது பயணமாகும். இருநாடுகளுக்கும் இடையே கூட்டாண்மை உறவுகள் தொடர்ந்து ஆழமாகி வருவதை பிரதிபலிக்கும் வகையில் இப்பயணம் அமைந்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடியை

வரவேற்கும் விதமாக அவரது விமானம் சவுதி அரேபிய வான் பரப்பில் நுழைந்தவுடன் அந்நாட்டின் எப்-15 ரக போர் விமானங்கள் பிரதமரின் விமானத்திற்கு பாதுகாப்பாக வந்தன.

ே□ாடி-வெளிநாடு

சவுதி அரேபியாவிற்கு புறப்படும் முன்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிக்கையில், இருநாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவும் உறவுகள் அண்மைக் காலங்களில் உத்வேகம் அடைந்திருப்பதாக தெரிவித்தார். பிராந்திய அமைதி, வளம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் இருநாடுகளுக்கும் பொதுவான ஆர்வம் இருப்பதாக அவர் கூறினார். சவுதி அரேபியாவில் உள்ள இந்தியர்கள் இருநாடுகளுக்கும் இடையே கலாச்சாரம் மற்றும் மானுட உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருவதாகவும் இவர்களை நேரில் சந்திக்க தாம் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். இம்முறை பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஜெட்டா பயணத்தினால் இந்தியாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையே, பாதுகாப்பு, எரிசக்தி, பொருளாதார வளர்ச்சி, பிராந்திய ஸ்திரத்தன்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புதிய உடன்பாடுகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போப் இறுதிச் சடங்கு

வாட்டிகனில் நேற்று காலமான பிரான்சிஸ் போப் ஆண்டவரின் இறுதிச் சடங்குகள், ரோம் நகரின் செயிண்ட் மேரி மேஜர் பசிலிக்காவில், வரும் சனிக்கிழமை நடைபெறும் என, இன்று, கர்தினால்கள் கூட்டத்திற்கு பின்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. போப்பாண்டவரின் உடல், நாளை முதல் செயிண்ட் பீட்டர் பசிலிக்காவில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் வாட்டிகன் அறிவித்துள்ளது. போப் பாண்டவரின் இறுதிச்

சடங்குகளில் உலகத் தலைவர்கள் பலரும் பங்கேற்க உள்ளனர். இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதை, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் உறுதிப் படுத்தி உள்ளார்.போப்பாண்டவர் மறைவை ஒட்டி இந்தியாவில் இன்றும் நாளையும், மற்றும், இறுதிச் சடங்கு நாளன்றும், அரசு முறைத் துக்கம் அறிவிக்கப் பட்டுள்ளது.

<u>ஆம்பர் கோட்டை</u>

இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் திரு. ஜே.டி வான்ஸ் இன்று காலை ஜெய்ப்பூரில் உள்ள யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்களில் ஒன்றான ஆம்பர் கோட்டையை குடும்பத்துடன் கண்டு களித்தார். முன்னதாக கோட்டைக்கு வந்த திரு. வான்ஸ் குடும்பத்தினருக்கு, ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, துணை முதலமைச்சர் திருமதி தியாகுமாரி ஆகியோர் வரவேற்பளித்தனர். அமெரிக்க துணை அதிபர் திரு வான்ஸ் இன்று ஜெய்பூரில், இந்திய-அமெரிக்க வர்த்தக உறவுகளின் எதிர்காலம் என்பது பற்றிய வர்த்தக உச்சி மாநாட்டிலும் கலந்து கொள்கிறார்.

<u>தன்கர்</u>

அரசியல் சாசனத்தின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பதில் மக்கள் பிரதிநிதிகளுக்கே, அதிக பட்ச அதிகாரம் இருப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். இன்று டெல்லி பல்கலைக் கழக நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர் நாடாளுமன்றமே உச்சநிலை ஜனநாயக அமைப்பு என்றும் நாடாளுமன்றத்தை மிஞ்சிய அதிகாரம் கொண்ட அமைப்பு எதுவும் அரசியல் சாசனத்தில் இடம் பெற வில்லை என்றும் கூறினார். நாட்டு மக்கள், அரசியல் சாசன விதிகளின் படி, தங்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் தேர்தல் மூலம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதாகவும், இவர்களே மக்களுக்கு பதில் சொல்ல கடமைப் பட்டவர்கள் என்றும் குடியரசு துணைத் தலைவர்

தெரிவித்தார். அரசியல் சாசனத்தில் ஒருங்கிணைந்த பகுதியாக முன்னுரை அமையவில்லை என, கோலக்நாத் வழக்கிலும், முன்னுரை, ஒருங்கிணைந்த பகுதிதான் என்று, கேசவாநந்த பாரதி வழக்கிலும், இருவேறுபட்ட கருத்துக்களை, உச்சநீதிமன்றம் வெளியிட்டு இருப்பதாக, குடியரசு துணைத் தலைவர் தமது உரையில், மேலும் குறிப்பிட்டார்.

<u>கே□ளா-நீதி□ன்றம்</u>

கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் மாநில ஆளுநர் தாமதம் செய்வதாக கூறி, கேரள அரசு தாக்குதல் செய்துள்ள மனுவை மே 6-ஆம் தேதி விசாரிக்க, உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. மசோதாக்கள் மீது முடிவெடுக்க, குடியரசு தலைவர் மற்றும் ஆளுநர்களுக்கு காலக்கெடு விதித்து அண்மையில் தமிழக வழக்கு ஒன்றில் உச்சநீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் கேரள அரசு இம்மனுவை தாக்கல் செய்துள்ளது. கேரள அரசின் பிரச்சனைகள் இத்தீர்ப்புக்கு உட்பட்டதா என்பதை இந்நீதிமன்றம் ஆராயும் என்ற நீதிபதிகள் திரு பிஎஸ் நரசிம்மா, திரு ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியது.

<u>இன்டர்ன்ஷிப்</u>

இந்திய தர நிர்ணயக் கழகம், தர நிர்ணயத் துறையில் அதன் கூட்டாண்மைக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு, இன்டர்ன்ஷிப் வாய்ப்புக்களை அறிவித்துள்ளது. இந்திய தர நிர்ணயக் கழகத்தின் தர நிர்ணய இருக்கைகள், மற்றும், கூட்டாண்மை கல்வி நிறுவனங்களின் தொடர்பு அதிகாரிகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில், இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. 4 ஆண்டு பட்டப் படிப்புகள், 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலைப் படிப்புகள் உட்பட பல்வேறு படிப்புகளில்

சேர்ந்துள்ள மாணவர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும் என மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*__சமூக நீதி__*

கடைக் கோடி மனிதனுக்கும் கல்வி, நிதி, மற்றும், சமூக அதிகாரம் கிடைக்காவிட்டால், நிஜமான வளர்ச்சி என்பதை எண்ணிப் பார்க்கவே இயலாது என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், சமூக நீதி பற்றிய விவாத நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் எந்த ஒரு மனிதனின் முன்னேற்றமும் பிறப்பின் அடிப்படையில் அன்றி, செயல்பாடுகளின் அடிப்படையில் அமைதல் அவசியம் என்றார். உரிமை மறுப்பினால் பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு, அண்ணல் அம்பேத்கரின் கனவுப்படி சமூக நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த இதுபோன்ற விவாத நிகழ்ச்சிகள் உதவிகரமாக இருக்கும் என அமைச்சர் தெரிவித்தார். சமுதாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான பல்வேறு முன் முயற்சிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*__வெப்ப அலை__*

புதுச்சேரியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வெப்ப அலையை சமாளிக்கும் விதம் குறித்து சுகாதாரத் துறை, மக்களுக்கான விழிப்புணர்வு கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இக்கையேடு கிடைக்கும் என்று சுகாதாரத் துறையின் முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் மணிமொழி எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். வெப்ப அலையால் ஏற்படும் ஹீட் ஸ்ட்ரோக் பிரச்சனையின் அறிகுறிகள் மற்றும் அதை சமாளிப்பதற்கான முதலுதவி முறைகள் குறித்து அவர் கூறுகையில்..........

(வாய்ஸ்)

<u>*வானிலை*</u>

தென் தமிழக கடலோரப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில் கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதியில் நிலவுவதால், இன்றும் நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதே பகுதிகளில் வரும் 28-ஆம் தேதி வரை மழை வானிலை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வரும் 26-ஆம் தேதி வரை, அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கான வாய்ப்பு குறைவு தான் என்றாலும், ஓரிரு இடங்களில் வெப்பநிலை சற்று அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் நாங்குநேரியில், 3 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

<u>*ஐபிஎல்*</u>

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-டெல்லி அணிகள் மோத உள்ளன. புள்ளிப் பட்டியலில் தற்போது, டெல்லி அணி, 2-ஆவது இடத்திலும், லக்னோ அணி 5-ஆவது இடத்திலும் உள்ளன.

<u>*தொல்லியல் ஆய்வு*</u>

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை, நாளை புதுடெல்லியில், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியத்தின் 38-ஆவது கூட்டத்தை, பாரத் மண்டபத்தில் நடத்த உள்ளது. ஆலோசனைக் குழு உறுப்பினர்களால் ஏற்கனவே வழங்கப்பட்ட ஆலோசனைகள் மீது, இதுவரை எடுக்கப்பட்ட

நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் மறுஆய்வு செய்யப்படும். இந்திய தொல்லியல் ஆய்வுத் துறைக்கும், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே, ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்குடன், 1945-ஆம் ஆண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட இந்த ஆலோசனை வாரியம், அதன் தலைவரான, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சரின் ஒப்புதலுடன், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்படுகிறது.

<u>ஜவுளித் துறை</u>

ஜவுளித் துறையில் மூங்கில் நாரின் பயன்பாட்டிற்கான வாய்ப்புகள் குறித்து, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், டேராடூனில் உள்ள, வனவள ஆராய்ச்சிக் கழகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வேகமாக வளரும் தன்மை கொண்ட மூங்கில் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகவும் திகழ்வதால், சுய சார்பு மற்றும் பசுமைப் பொருளாதாரம் பற்றிய அரசின் நோக்கங்களுக்கு பொருத்தமானது என்று அவர் கூறினார். மூங்கில் உற்பத்தியை ஊக்குவிப்பதால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் உலக ஜவுளி வரைபடத்தில் இந்தியாவிற்கு முக்கிய இடம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். மூங்கில் விளையும் பிராந்தியத்திற்கு உட்பட்ட மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் மூங்கில் உற்பத்தி அதிகரிப்பதற்கான செயல் திட்டங்கள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. உத்தராகண்ட் வேளாண் அமைச்சர் திரு கணேஷ் ஜோஷி உள்ளிட்டடோர் இதில் கலந்து கொண்டனர். மூங்கில் நாரில் செல்லுலோஸ் அதிகம் இருப்பதால், விஸ்கோஸ், ரேயான் போன்ற செயற்கை இழைகளை தயாரிப்பதில் மரக் கூழுக்கு பதிலாக, மூங்கில் கூழை பயன்படுத்த முடியும் என்பதும் இதனால் வன வளத்தை பாதுகாக்க ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.